பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை: சதம் 75

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8174

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆடி 26 ஷவ்வா 9 இதழ் 177
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-8-1981

எம்மிடம்
வெளி நாட்டில் இருந்து
இறக்குமதியான
வெல்டிங் றொட்
தேவையான அளவு பெற்றுக்
கொள்ளலாம்.
விபரங்கட்கு:
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 508

★ பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மண்டூர் கிராமத்தில் ★

# ஆயுதபடையின் உதவியுடன் 600 ஏக்கரில் நெல் அறுவடை!

## பொதுமக்கள்கோரிக்கைமீது 'சிவா' நடவடிக்கை

(மட்டக்களப்பு நிருபர் தமிழினியன்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில்காலபோகஅறுவடைக்குத்தயாராகஇருக்கும் அறுநூறு ஏக்கருக்கும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அறுவடையின்போது பொலிஸ் - இராணுவ கூட்டுப் பாதுகாப்பும் வழங்கப்படும்எனத் தெரியவருகிறது.**

**இதுசம்பந்தமாகஇப்பகுதிப் பொதுமக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்துக்கு விடுத்த கோரிக்கையின்மீது, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிளைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்துள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி திரு ரி. இராசலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தி, அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. அல்பேர்ட் சிவரத்தினம், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ஆ. வேல்முருகு ஆகியோர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்

[6-ம் பக்கம் பார்க்க]

## தினமும் 850 'பாஸ்போர்ட்'

[கொழும்பு]

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு 'பாஸ் போர்ட்' [கடவுச்சீட்டு] விநியோகத்தின் மூலம் ஒரு நாளைக்கு 85,000 ரூபா வருமானம் கிடைக்கிறது.

இத்திணைக்களம் நாளொன்றுக்கு 850 'பாஸ்போர்ட்டு' களை விநியோகம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் நிலையத்திற்குப் பதிலாக நல்லிணக்க சபை

### பண்ணாகத்தில் ஆரம்பம்

[சுழிபுரம்]

பண்ணாகம் கிராமத்தில் ஏற்படும் சிறு பிணக்குகள் மற்றும் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு நல்லிணக்கசபையொன்று அமைக்கப்பட்டுள்ளது

இளைப்பாறிய தலைமை அலுவலக பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வ. ஆறுமுகம் தலைமையில் இந்த நல்லிணக்க சபை அமைப்பட்டுள்ளது.

இச்சபை பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஓர் அங்கமாகச் செயல்படவுள்ளது.

[6ம் பக்கம் பார்க்க]

மாபெரும்
புத்தகக் கண்காட்சி
யாழ்ப்பாணம்,
பூபாலசிங்கம் புத்தகசாலை
நல்லூர்க் கந்தனின் உற்சவத்தை முன்னிட்டு
நல்லூர் சிவன்கோவிலுக்கு அருகாமையில்
அமைந்துள்ள எமது காட்சிச் சாலையில்
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
சமய, இலக்கிய, மருத்துவ, விஞ்ஞான, சட்ட,
வர்த்தக, உளவியல், புள்ளியியல், பொறியியல்
மற்றும் ஏராளமான நூல்கள் உட்படப்பல நூல்கள்
காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்
English for You, ரேய் செனிவிரத்னவின்
Spoken English மற்றும் பண்டிட் சேதுராமனின்
அதிர்ஷ்ட விஞ்ஞானம், சிறுவர்களுக்கான நூல்கள்,
ஆங்கில, தமிழ Dictionary வகைகள் அனைத்தும்
எமது கண்காட்சியில் அமைந்துள்ளன.
நீங்கள் ஒருமுறை எமது கண்காட்சிக்கு விஜயம்
செய்யுங்கள். நூல் நிலையங்களுக்கும், நூல் நிலைய
அன்பளிப்புக்கும் விசேஷ கழிவு உண்டு.
பூபாலசிங்கம் புத்தகசாலை
[நல்லூர் சிவன்கோவிலுக்கு அருகாமையில்]
யாழ்ப்பாணம்.
தலைமையகம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7631
கிளை நிறுவனங்கள்:
புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்.
இல: 3, ஆஸ்பத்திரி வீதி, [களஞ்சியம்]
யாழ்ப்பாணம். தொலைபேசி: 8076
தொழிற்சாலை:
P. B. D. இன்டஸ்ரீஸ்,
212, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

'அமிரு'க்கு எதிரான நடவடிக்கை

## "அரசமைப்புக்கு முரணானதாகும்!"

### பிரதி நீதி அமைச்சர் கருத்து

[கொழும்பு]

"எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக பாராளுமன்றம் எடுக்கும் எந்த நடவடிக்கையும் அரசியலமைப்புக்கு முரணானதாகும்" என்று பிரதி நீதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

"எதிர்க்கட்சித் தலைவர் அரசியலமைப்பிற்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்தபோதிலும் அவர் தமது சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதையோ, தனிநாடு கேட்பதையோ அரசியலமைப்புத் தடை செய்யவில்லை.

"தனிநாடு கேட்பது குற்றமாகுமென்று சட்டம் கொண்டுவரவேண்டுமானால் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படவேண்டும். இது அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும்.

"எதிர்க்கட்சித் தலைவரை அப்பதவியிலிருந்து அகற்ற

[6-ம் பக்கம் பார்க்க]

## பரீட்சை நிலையங்களை மாற்றக் கோரிக்கை!

[மட்டக்களப்பு]

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் க. பொ. த. [உயர்தர], சாதாரணதரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் இப்பரீட்சையெடுக்கவுள்ள பரீட்சார்த்திகளில் சிலர், தாம் அங்கு செய்லமுடியாத நிலையிலுள்ளதாகவும், தமதுபரீட்சை நிலையங்களை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாற்றித் தரும்படியும் மட்டக்களப்புக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். சரீப்பிடம் கேட்டுள்ளனர்.

இது குறித்துப் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொள்வதாக ஜனாப் சரீப் இவர்களிடம் தெரிவித்துள்ளார். [க]

## ஆனந்தன் மயக்கமுற்றார்

சென்னை, ஆக. 9

இடைவிடாது 350 மைல் நடந்து உலக சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் சென்னையில் இரவு பகலாக நடந்துகொண்டிருந்த ஆழிக்குமரன்ஆனந்தன கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மயக்கமுற்றநிலையில் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார். இவர் 251மைல் நடந்து முடித்திருந்தார்.

**மணிவாக்கு**

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.
—ஆறுமுகநாவலர்.

# நமது நோக்கு

## கிழக்கு வன்செயல்கள்

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்செயல் களால் பாதிக்கப்பட்ட மக்கள் - நூற்றுக் கணக்கானோர் அகதிகளாக, கோவில்களிலும், பாடசாலைகளிலும் முகாமிட்டு இருக்கும்செய்தி வடபகுதி மக்களுக்கு ஒரு நூதனமாகத் தோன்ருது.

வடக்கில் நடந்தது, கிழக்கில் 'நடக்கும்' என்ற வருங்கால வினமுற்றில் அச்சம் எதிரொலித்தது நினைவுக்கு வருகின்றது.

சூறவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்களுக்கு நிவாரணம் வழங்க யாழ்ப்பாணம் துள்ளிஎழுந்தது மக்கள் இன்னும் மறக்கவில்லை. முந்தநாள்தொட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவ மாணவிகள் மட்டக்களப்பு அகதிகளுக்கு உடை நிவாரணம் தேடுவதில் வீடுவீடாகச் சென்ற காட்சி, மனிதாபிமானம் பற்றிப் பேசும் மக்களுக்கும் அரசுக்கும் ஒரு நல்ல பாடமாக அமைய வேண்டும்.

இனவாதம் மேலிட்டால், நீயனைக்கும் யந்திரம் செயற்பாடற்ற நிலையைக் குறிக்கும்.

மர்ம மரணங்கள், வீடுகளுக்குத் தீ, பொதுமக்களின் பீதிநிலை - இவையெல்லாம் மக்களின் அமைதி வாழ்வுக்கு நாசம் விளைக்கும் கருவிகள். இனக்குரோதம், அல்லது அரசியல் போட்டிதான் காரணமென்ருல் தலைவர்கள் - அதுவும் அரசில் பொறுப்பான இடம் வகிக்கும் தலைவர்கள் மௌனம் சாதிப்பதேன்?

கடைசியாகக் கிடைத்த செய்தி தேற்றமளிக்கின்றது. மட்டக்களப்புப்பகுதியில் பூரண அமைதி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது. ராணுவத்தினரும் பொலிசாரும் காவல் புரிவதால் நிலைமை கட்டுக்கடங்கியிருப்பதுபோல் தெரிகிறது.

கிழக்கு வன்செயல்களையும், வடக்கு வன்செயல்களையும் வடக்கின் பயங்கரவாதத்துடன் இணைக்க சில பத்திரிகைகள் தவறவில்லை. நாய் வேட்டைக்குத் தவிலடிக்க அவை என்றுமே தயாராகவிருக்கின்றன.

வடக்கின் அகதிகளை நாம் உலருக்கெடுத்து விளக்கிய போது அரசு ஆத்திரப்பட்டது. நாம் மிகைபடக் கூறியதுபோல் அரசுக்குப் பட்டது. யாழ்ப்பாணத்தை நேரில்வந்து பார்த்தஐரோப்பிய, அமெரிக்க உல்லாசப் பயணிகள், அவ்வேடத்தில் நுழைந்த பத்திரிகையாளர்களின் தீர்ப்பு அரசாங்கத்துக் கெதிரான தென்பதை விளக்கத் தேவையில்லை.

மட்டக்களப்பு அகதிகள் அகதிகளே - வீடற்று, உணவற்று: உடையற்று, வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பறிபோன நிலையிலிருக்கும் இந்த அப்பாவிகள் எங்கள் சகோதரர்கள்; நாட்டு மக்கள் அனைவரும் அவர்களுக்காகக் குரலெழுப்பி, அமைச்சரவையில் பணிபுரியும் மட்டக்களப்புத் தலைவர்களைத் தட்டிஎழுப்ப வேண்டும்.

மக்கள் பாதுகாப்புடன் வாழும் உரிமை, மனித உரிமை. அரசியல் வேறுபாடுகள் இந்த உரிமைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

அரசாங்கக்கட்சி இதனைத் தட்டிக்கழித்தல் நியாயமல்ல, தர்மமுமல்ல. எதிர்க்கட்சிகள் இதனைப் பயன்படுத்தி கண்டனக் கூட்டத்தில் இறங்குவது தேவையானாலும், அதன் முதற்கடமையாகாது. பீதி பரவாமல், பாதுகாப்பு நிலைமையைப் பலப்படுத்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

ஐ. தே. கட்சி ஆட்சியென்ருல் எந்த மனிதனும் அச்சமின்றி எங்கும் உலவலாம் என்ற நம்பிக்கை பண்டைய சரித்திரமாய்விட்டது. இதனை மாற்றிஅமைப்பதில் ஆட்சியின் வருங்காலச் செல்வாக்குப் பெரிதும் தங்கியிருக்கின்றது.

## அரசியல்வினுவிடை

இக்காலத்து சைவ மக்களுக்கு- குறிப்பாக மாணவர்களுக்கு ஆறுமுக நாவலரின் சைவ வினுவிடை அர்த்தமற்றது போல் தோன்றும்.

காரணம், எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து அழிக்கும் சர்வவல்லவரான நல்லூர்க் கந்தனுக்கும் பொலிஸ் பாதுகாப்பு என்று நினைப்பது.

அவர்கள் விளக்கத்தில் தப்புண்டு. நல்லூர்க் கந்தன் எல்லாம் வல்லவர், அவருக்குப் பாதுகாப்புத் தேவையில்லை.

எனவே யாருக்குப் பாதுகாப்பு? இந்த வினுவுக்கு நாவலரின் சைவவினுவிடையில் இடமில்லை. அரசியல் வினுவிடை ஒன்று தயாரிக்க வேண்டும்.

வினு: பொலிஸ் பாதுகாப்பு யாருக்கு?

விடை; அங்கு கூடும் பக்தர்களுக்கு.

வினு; துப்பாக்கி சகிதமான ராணுவ பாதுகாப்பு யாருக்கு?

விடை; அது பக்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொலிஸாருக்கு.

வினு; பொலிஸ்ாருக்கு பாதுகாப்பு ஏன்?

விடை; பயங்கரவாதிகள் பொலிசாரைத் தாக்குவதால்.

வினு: இராணுவத்தினருக்குப் பாதுகாப்பு யார்?

விடை: நல்லூர்க்கந்தன், ராஜாதி ராஜன், மூலகாரணமாய் நிற்கும் மூர்த்தி!

வினு: ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கிறது கேட்கவில்லையா?

விடை; ஆம், சாடையாகக் கேட்கிறது.

வினு: அரசாங்கத் தலைவர்கள் எலலோரும் வாய் மூடிக் கொண்டிருப்பதா?

விடை: எல்லோருமல்ல.

வினு; யாரும் எதிர்க்குரல் எழுப்புகிருரா?

விடை: ஆம்.

வினு: நீர் எதனைக் கருத்திற் கொண்டு 'ஆம்' என்கிறீர்?

விடை: எதிர்க்கட்சித் தலைவருக்கெதிரான நடவடிக்கைகள் பற்றி.

வினு: இது பற்றி யார் குரலெழுப்புகிருர்?

விடை: பிரதி நீதியமைச்சர் ஷெல்டன் றனராஜா.

வினு; அவருடைய கருத்தென்ன?

விடை: இன்றைய சட்ட அமைப்பில் எதிர்க்கட்சித் தலைவரைத் தண்டிக்க இடமில்லை.

வினு: என்ன காரணம் கூறுகிறீர்?

விடை: எதிர்க்கட்சித் தலைவருக்கு தனிநாடுகோர உரிமையுண்டு. அதனைச் தடைசெய்யச் சட்டம் கொண்டு வருவதானல் அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும். இது சாத்தியமற்றது

வினு: அரசாங்கத்திலும் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவு உண்டென்ருசொல்கிறீர்?

விடை: எதிர்க்கட்சித் தலைவரென்ருே அல்லது திரு. அமிர்தலிங்கமென்ருே அல்ல; நியாயத்துக்கு அங்கும் இடமுண்டு

வினு: நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் காணப்படவில்லையே

விடை: நொன்சென்ஸ்; சிலர் எதிர்த்துப் பேசவில்லையா? அமைச்சர் தொண்டமானின் பேச்சுப் புரியவில்லையா; அமைதியாயிருந்த அழமான பிரதி நீதியமைச்சர் வாக்களிப்பில் சேரவில்லையென்பதை மறந்துவிட்டீர்.

ஹிரோஷிமாவில் அணுகுண்டு விழுந்து

36 ஆண்டுகளாகின்றன

# அணு ஆயுத போர் ஆபத்து

**பேராசிரியர் யு. ஆர். ராவ்**
(இயக்குநர் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்)

கடந்த இருபதாண்டுகளில் அணுஆயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பதற்காக ஏறத்தாழ 10,00000 கோடி டாலர் தொகையைப் பல்வேறு நாடுகள் செலவழித்துள்ளன. இதே தொகையை வறுமைக் கோட்டிக்குக் கீழே வாழும் ஏராளமான மக்களை உயர்த்துவதற்குச் செலவு செய்தால் உலகின் தோற்றம் முழுவதும் மாறிவிட்டிருக்கும் என்பது மேலே குறிப்பிட்ட மிகக் குறைந்த மதிப்பீடு கூடத் தெளிவாகக் காட்டுகிறது.

விஞ்ஞானம் எதையாவது நமக்குக் கற்றுத் தந்திருக்கிறது என்ருல் அதாவது நாம் வாழும் பூவுலகம், சூரியமண்டலத்தில்தான், அது ஒரு சிறிய கோளமாக இருந்தபோதிலும் ஜீவராசிகள் தோன்றியுள்ளன என்பதாகும். இந்த உயிரினத்தை அபாயத்திற்குட்படுத்தாதிருப்பதும், பூமியின் விலைமதிப்பற்ற சுற்றுச்சூழல் மாசுபடாதிருப்பதும் உத்தரவாதம் செய்யப்படுவது ஒவ்வொரு தேசத்தின் ஒவ்வொரு சமுதாயத்தின் கடமையாயிருக்க வேண்டும்.

இப்போது குவித்து வைக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்களின் அளவு உலகம் முழுவதையும் பத்துத் தடவைகள் அழிந்துவிடுவதற்குப் போதுமானதாயுள்ளன. அணு ஆயுதப் போரானது உலக நாகரிகத்தில் ஒரு பெரும் பகுதியை அழித்துவிடுவதோடு மட்டுமின்றி உலகத்தையே பல தலைமுறைகளுக்கு மனித சஞ்சாரமற்றதாக்கி விடும்.

உலக நாகரீகத்தைக் காப்பாற்ற வேண்டுமானல் சகல சமுதாயங்களும், தேசங்களும் அவற்றின் நிறம், கொள்கை எவ்வாறிருந்தபோதிலும் ஒரே குழுவாக இயங்க வேண்டியது அத்தியாவசியமாகும்; சமுதாயங்களுக்கும் தேசங்களுக்கும் இடையே எத்தகைய பெரும் வேற்றுமைகள் இருந்தபோதிலும் ஒன்றுபடுவது முற்றிலும் அவசியவாகும்.

அநேகமாக ஒரே வினடியில் பற்பல நூற்றுண்டுகளாக நிர்மாணிக்கப்பட்ட அனைத்தையும் அணு ஆயுதப்போர் அழித்தொழித்துவிட முடியும், சமாதானம், அமைதி சூழ்நிலையில் மனித வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்காகவும், ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பதிலாக சிலர் உலக நாகரிகத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய ஆயுத உற்பத்திப் போட்டியைமுடுக்கிவிடக் கங்கணம்கட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அரசியல் சித்தமும் சமூக விவேகமும ஒருபோதும் விஞ்ஞானம், தொழில் நுட்பவியலுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கவில்லை என்பதுதான் எப்போதுமே மனிதகுலத்தின் பிரச்னையாக இருந்துவந்துள்ளது; மனிதனுடைய நன்மைக்காகவும் மனிதகுலத்தின் வளர்ச்சிக்காகவும் விஞ்ஞானம் தொழில் நுட்பவியலின் பலன்களை பயன் படுத்துவதற்குப் பதிலாக சிலர் விஞ்ஞானம் சேவை புரிய வேண்டும் என்று கூறப்படுகிற மனிதகுலத்தையே அழித்தொழிப்பதற்கு இந்த முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதற்கு முயல்கின்றனர்.

### ஆயுத உற்பத்திப் போட்டி

ஆயுத உற்பத்திப் போட்டியும் அணு ஆயுதப்போர் அபாயமும் தேசங்கள், சமுதாயங்கள் மத்தியில் ஒருவகைப்பட்ட வெறியுணர்ச்சியை உருவாக்கியுள்ளன. இவை அவற்றின் கவனத்தையும் சக்தியையும் இயற்கைக்கு ஆக்கபூர்வமாகப் பங்குபணி ஆற்றுவதிலிருந்து மிக நாசகரமான ஆயுதங்களை உற்பத்திசெய்து குவித்து வைப்பதற்குத் திருப்பிவிட்டுள்ளன. அச்ச உணர்வு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மனிதருக்கும் இடையேயும், ஒரு சமுதாயத்திற்கும் மற்ருெரு சமுதாயத்திற்கும் இடையேயும் ஒரு தேசத்திற்கும் மற்ருெரு தேசத்திற்கும் இடையேயும் அவநம்பிக்கைதான் நிலவுகிறது.

இன்று பல தொழில்துறைத் தொகுப்புகள் இத்தகைய நாசகரமான ஆயுதங்களையும், சருவிகளையும் பெருமளவில் விற்று லாபம் சம்பாதிப்பதன் மூலம் வளர்ந்தோங்கி வருகின்றன போலும், இது, சிறிய தேசங்கள் கூட, இவற்றில் சில ஆயுதங்களை குவித்து வருவதற்கு ஊக்கமளித்துள்ளது.

சிறிய தேசங்கள் தம்மை எதிர்நோக்கும் பொருளாதார வளர்ச்சி போன்ற மெய்யான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பது சம்பந்தமாக தமது கவனத்தைத் திருப்பும்படி செய்வதற்காகவும், பெரிய நாடுகள் வளர்முக நாடுகளுக்கு அவற்

[6-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## குற்றங்களைத் தடுக்க...

நாட்டில் குற்றச் செயல்கள் மலிந்துவிட்டன. இதனல் துன்பங்கள் மலிந்துவிட்டன. இதற்கு நிவாரணம் பெற, கிராமம் தோறும் குற்றத் தடுப்பு இயக்கங்களைஅமைத்து செயற்படுத்தத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும்.

ஜி.ஜி. லக்ஷ்மிநாராயணன் சுவாமி
பூதவராயர் ஒழுங்கை,
சட்டநாதர் வீதி,
நல்லூர்.

# இன்று பரிசளிப்பு விழா

[உரும்பராய்]

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று மாலை, வித்தியாலயத் திறந்தவெளியரங்கில் நடைபெறுகிறது.

பேராசிரியர் ப. சந்திரசேகரமும் திருமதி கமலாதேவி சந்திரசேகரமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா சிறப்புரையாற்றுவார்.

இசை, நடனம், வில்லிசை, நாடகங்கள், தேகாப்பியாசம், கோலாட்டம் முதலான நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

திருமதி சந்திரசேகரம் பரிசுகளை வழங்குவார். (அ)



# இன்று நல்லூர்க் கந்தன் 6-ம் திருவிழா

சேந்தனைக் கந்தனைச் செங்
கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்
விரித்தோனை விளங்கு
வள்ளி
காந்தனைக் கந்தக்கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொருதாழ்
வில்லையே.

— கந்தர் அலங்காரம்

# முருகா நீ! பதில் சொல்

அறம்கெட்ட கூத்திக்கு அடிமை செய்துவாழ
ஆண்டவா ஏன் விதித்தாய்? - பல
மரத் தமிழர் என் வாழ்வைச் சீரழிக்க நீ!
பார்த்துக் கொண்டேனிருந்தாய்?—எங்கள்
மறத்தமிழ்த்தாய் மானங்கெடுத்த அழிவாளரை
மன்னித்தேன் விட்டு வைத்தாய்?—காட்டுக்
குறக்குல வள்ளி மணளா முருகையா
கூறு நீபதில் எனக்கே!

அதர்மஞ்செய் அசுரர் அநீதி யிழைக்கையில்
அழகா ஏன் பார்த்திருந்தாய்?—தீய
மதம்பிடித்த ஊரார் நிதம் தீமை செய்யும்
மதிமனம் ஏன் கொடுத்தாய்—அழுகல்க்
குதம்குறி நாறூப் பிணம்தின்னும் பேய்களின்
கூட்டத்தை ஏன் படைத்தாய்—வள்ளிக்
கிதமான இன்ப மணளா முருகையா
இயம்புக பதில் எனக்கே!

அன்புத் தமிழர் அறம் ஒழுக்கம்கெட
அருளாளா ஏன் விடுத்தாய்?—கலித்
துன்பத்தைப் பாவத்தை கலியுக வரதன் நீ
கொலைக்காது ஏன் விடுத்தாய்?--தீயோர்
இன்பமெனத் தினம் வம்புத் தொழில் செய்ய
இடம்விட்டு ஏன் கொடுத்தாய்?-- குற
இன்ப வள்ளி மணளா முருகையா
எடுத்துரை பதில் எனக்கே.

— அருட்கவிஞர் திமிலைக் கண்ணன்.

வட அயர்லாந்தில்

# உண்ணாவிரதமிருந்த 9வது ஐரிஷ் கைதியும் மரணம்!

பெல்பாஸ்ட், ஆக. 9

சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வந்த ஒன்பதாவது ஐரிஷ் கைதியும் நேற்று பெல்பாஸ்ட் சிறைச்சாலையில் மரணமானார்.

கடந்த 63 தினங்களாக உண்ணாவிரதமிருந்துவந்த இக் கைதி சிறைச்சாலையில் அளிக்கப்பட்ட மருத்துவ வசதிகளையும் ஏற்க மறுத்துவிட்டார்.

இவரின் மரணத்தைத் தொடர்ந்து பெல்பாஸ்ட்டில் மீண்டும் வன்செயல்கள் தலைதூக்கியுள்ளது. ஐரிஷ் குடியரசுப் படையைச் சேர்ந்தவர்கள் பெல்பாஸ்டிலுள்ள இராணுவ நிலையங்கள், பொலிஸ் நிலையங்களுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ஐரிஷ் குடியரசுப்படையைச் சேர்ந்தவர்கள் தாம் அரசியல் கைதிகளாக கணிக்கப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவருவது தெரிந்ததே. (வே.

## பாரதியார் வரலாறு திரைப்படமாகும்

சென்னை, ஆக. 9

மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்படும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

செப்டம்பர் மாதம் 11-ம் திகதி முதல் ஒரு வாரகாலம் பாரதியார் விழாக்களை தமிழகம் முழுவதும் கொண்டாட முடிவுசெய்யப்பட்டுள்ளது. (து)

## இந்திரா கென்யா பயணம்

புதுடில்லி, ஆக. 9

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கென்யா பயணமானார். இவர் நைரோபியில் எரிசக்தி தொடர்பான மகாநாடொன்றிலும் உரையாற்றுவார். (வே)

## ஒரிஸாவில் சூறாவளி

ஒரிஸாவில் ஏற்பட்ட சூறாவளியினால் அதன் கரையோரப் பகுதிகள் பெரும் சேதமடைந்துள்ளன. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பார்சல்களை வழங்கிவருகின்றனர். (வே)

## உலகில் அணு ஆயுத யுத்தம் விரைவில் ஏற்படும்!

### வால்ட்ஹெய்ம் எச்சரிக்கை

வியன்னா, ஆக. 9

"வல்லரசு நாடுகளுக்கிடையேயான போட்டா போட்டியும், வறிய நாடுகளுக்கும், செல்வந்த நாடுகளுக்குமிடையேயான கருத்து மோதல்களும் உலகில் விரைவில் அணு ஆயுத யுத்தமொன்று ஏற்பட வழிவகுக்கும்."

மேற்கண்டவாறு ஐ. நா. பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் வியன்னாவில் நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் அப்பேட்டியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது!

"அணு ஆயுத யுத்தத்தின் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியாது. பேச்சுவார்த்தைகள் மூலமே எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும்.

"1962-ம் ஆண்டு கியூபாவில் ஏற்பட்ட ஏவுகணை நெருக்கடி போன்றதொரு ஏவுகணை நெருக்கடி தற்போது உலகில் ஏற்பட்டுள்ளது.

"சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவும், அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்ஸாண்டர் ஹெய்க்கும் இவ்வாரம் அணு ஆயுதம் குறித்து நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தை சுமுகமான நிலைமையினை உலகில் ஏற்படுத்துமென நம்புகிறேன்" என்றார். (வே)

## இந்திய அமைச்சரவையில் மாற்றம்

புதுடில்லி, ஆக. 9


இந்திய மத்திய அமைச்சர்கள் இருவரின் பொறுப்புகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மத்திய சட்ட அமைச்சர் திரு. என். டி. திவாரி தொழிலமைச்சராகவும், மத்திய தொழிலமைச்சர் திரு. எஸ். பி. சவான் திட்டஅமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (வே)


# காணி விற்பனை

## கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறையில் முப்பது (30) காணித்துண்டுகள். பலதரப்பட்ட உபயோகங்களுக்கான விசாலமான காணிகள், 14-ம் துண்டு நீங்கலாக விற்பனைக்குண்டு. இவை சிவன்கோவில், கத்தோலிக்கத்தேவாலயம், தபாற்கந்தோர், கடைத்தெருக்கள் ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ளன; கீழ்க்கண்டபடத்தின்படி தேவைக்கேற்ப தங்கள் விலையைக்கோரி விண்ணப்பிக்கவும்.




## ந. சந்தையா செட்டியார்

584, ஆஸ்பத்திரி ரோட் - யாழ்ப்பாணம்.

(0568)

"தொல்லை தருபவர் காவல் படையினரே

# அன்று மறுத்த அரசினர் இன்று ஏற்றுக்கொண்டனர்!"

## பண்ணாகத்தில் 'அமிர்' உரை

[சுழிபுரம்]

"எமக்குத் தொல்லை தருபவர்கள் பொலிஸ், இராணுவம் ஆகிய காவல்படையினர் என்பதை நாம் கூறியபோது ஆட்சியாளர் அன்று ஒத்துக்கொள்ளவில்லை. சென்ற மாதம் நடைபெற்ற சம்பவத்தை அடுத்து பொலிசார்தான் அட்டூழியம் செய்தனர் என்பதை ஆட்சியாளர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர்."

பண்ணாகம் கிராம ஒன்றியத்தின் கருத்தரங்கில் பேசுகையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்ணாகம் கிராம அபிவிருத்திசபை மண்டபத்தில் செல்வன வி. மகாதேவன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

"துன்பங்களும் தொல்லைகளும், சோதனை மேல் சோதனைகளும் ஏற்பட்ட காலங்களில்தான் எமக்கு விடுதலை உணர்வு மேலோங்கியுள்ளது. சென்ற 1958ம் ஆண்டு முதல் நாம் பல்வகைப் பாதிப்புகளுக்குள்ளாகி வருகின்றோம். சொத்துக்கள், சுகபோகம், மானம், உயிர் ஆகிய எல்லாவற்றையும் இழந்திருக்கின்றோம். காவல் படையினர் எம்மைத் தாக்கிக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினராக மாறிவரும் இவ்வேளையில் நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டியது எங்கள் கடமையாகும். ஒவ்வோர் கிராமத்தின் பாதுகாப்பும் அக்கிராமத்து மக்களிடமே இருக்க வேண்டும்."

## நல்லூர் உற்சவ ஒழுங்குகள்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி ஆலய ஒழுங்கு, மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் ஆணையாளர் திரு. க. சிவஞானம், மாநகர நல்லூர் வட்டார உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் கவனித்து வருகின்றனர். அவர்களுடன் சுகாதார உத்தியோகத்தர்களும் சுகாதாரம் சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். [மா]

## பாதிக்கப்பட்ட...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டங்களின் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதோடு, அகதிகள் முகாம்களுக்கும் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார். மண்டூர் பதின்மூன்றாம் குடியேற்றத் திட்டத்தில் வன்செயல்களால் 30 வீடுகளும் ஐம்பதுக்குமேற்பட்ட சிறிய குடிசைகளும் சேதமடைந்துள்ளன.

மண்டூர் 11ம், 13ம், 16ம், 25ம் குடியேற்றத்திட்ட கிராம மக்களும், மலையக மக்களும் துறைநீலாவணையில் அகதிகளாகவுள்ளனர்.

இவர்களைத் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிச்செல்லுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் கேட்டுள்ளார்.

இக்கிராம மக்களில் 16ம், 25ம் குடியேற்றத் திட்டங்களில் வசித்து வருபவர்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச்செல்ல மறுக்கிறார்கள். ஏனைய குடியேற்ற மக்களை அவர்களின் வசிப்பிடங்களில் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளை திரு. சிவசிதம்பரம் மேற்கொண்டுள்ளார்.

மண்டூர் 16, 25ம் குடியேற்றக் கிராமங்களில் காலபோக வேளாண்மை சுமார் 600 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு அறுவடைக்குத் தயாரான நிலையிலிருப்பதால், இதற்கேற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொது மக்கள் திரு. சிவசிதம்பரத்திடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பொலிஸ், இராணுவ பாதுகாப்புடன் அறுவடை செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அவர் தெரிவித்தார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளையும் பிரதம மந்திரியுடன் தொடர்பு கொண்டு செய்வதாகவும் திரு சிவசிதம்பரம் இவர்களிடம் தெரிவித்தார்.

துறைநீலாவணை, மண்டூர், கல்முனை முதலான அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்குவதில் அப்பகுதிக் கிராம மக்களும், சமூக ஸ்தாபனங்களும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

அரசாங்க, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் அம்பாறைக்குத் திரும்பிச் செல்வதற்குத் தயக்கமடைந்து வருகிறார்கள். [வெ]

## இதுவும் நடக்கிறது

மேற்கு ஜெர்மனியிலிருந்து சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த பத்திரிகையாளர்கள் கோஷ்டி வந்த கையுடனேயே திரும்பிவிட்ட விஷயம், நீங்கள் அறியாத ரகசியம் அல்ல. ஆனால் அவர்களில் பலர் "போன மச்சான் திரும்பி வந்தான்" கதை மாதிரி அண்மையில் இலங்கை வந்து ஜெர்மனி மீண்டது பலருக்குத் தெரியாது!

காதோடு காதாக ஒரு விஷயம்—

முன்னர் அவர்கள் 'ஜெர்னலிஸ்'டாக வந்து திருப்பி விடப்பட்டார்கள் இப்பொழுது அவர்கள் வந்தது— 'டூரிஸ்டாக' [உல்லாசப் பிரயாணிகள்]!

⁂

மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் வடபகுதி இளைஞர்கள் பற்றிய செய்தி, ஓரளவு பழையது தான்.

பலருக்கு பல எண்ணங்கள் இருந்தபோதிலும் சட்டரீதியாக அரசியல் புகலிடம் வழங்குவதற்கு சில சந்தர்ப்பங்களில் 3, 4 வருடங்களும் பிடிக்கும். அதிலும் எல்லோருக்கும் இது கிடையாது. இந்த வகையில் உத்தியோகபூர்வமாகக் கிடைத்த ஒரு புள்ளிவிபரம் கீழ்க்கண்டமாதிரிக் கூறுகிறது:

1979ல் அரசியல் புகலிடம் கோரியவர்களின் மொத்தத் தொகை 1077. இவர்களில் மூவருக்கு மட்டுமே அரசியல் புகலிடம் கிடைத்தது. 1980ல் அரசில் தஞ்சம் கோரிய 2673 பேரில் ஏழு பேருக்கு மட்டுமே சட்டரீதியான அரசியல் புகலிடம் கிடைத்தது!

— ஊடுருவி

## வரட்சிநிவாரண வேலைகள்

[வேலணை]

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு பகுதியில வரட்சி நிவாரண வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. [க]

## பொலிஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

பொலிஸ் நிலையம் செல்லாது தங்களது பிணக்கைத் தீர்ப்பதற்கு இனிமேல் இந்த நல்லிணக்கசபையினரிடம் சென்று தங்கள் பிரச்னைகளைக் கூறி தீர்த்துக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது. [க]

## அரசமைப்புக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென்று பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றைக் கொண்டு வருவது முறையானதல்ல. ஏனெனில் அவர் எந்த விதமான குற்றமும் இழைக்கவில்லை.

"எதிர்க்கட்சித் தலைவர் கடந்த காலத்தில் தவறுகள் செய்திருந்தாலும், செய்ததாகக் கருதப்பட்டாலும் அவரைத் தண்டிக்க முடியாத வகையிலே அரசியலமைப்பு அமைந்துள்ளது.

"தமிழர் விடுதலைக் கூட்டணி ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும், மேடையிலும் தனிநாட்டுப் பிரசாரத்தையே மேற்கொண்டு வந்துள்ளது இக்கூட்டணி ஒரு இனவாதக் கட்சியாகவே தொடர்ந்தும் இயங்கி வருகிறது." [வெ]

## நியூரோன் குண்டு தயாரிக்க றீகன் அனுமதி

வாஷிங்டன், ஆக. 9

ஆகாயத்தில் வெடித்து துருப்புகளை நிர்மூலமாக்கக் கூடிய நியூரோன் குண்டுகளை தயாரிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி திரு றீகன் அனுமதி வழங்கியுள்ளார்.

இக்குண்டுகள் அமெரிக்காவில் மாத்திரமே வைத்திருக்கப்படுமென்றும், அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள தளங்களில் இவை வைத்திருக்கப்பட மாட்டாதென்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [வெ]

## ரூ. 4000 வழங்க உத்தரவு

[சாவகச்சேரி]

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலில் குருக்களாகக் கடமையாற்றிய இரத்தினசாமிக்குருக்கள் என்பவர் தமது சேவைக்கால நிவாரணம் கோரிச் சாவகச்சேரி வடபிராந்தியத்தொழில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நீதிபதி எஸ் என். குருசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின் இரத்தினசாமிக்குருக்களுக்கு ரூ4000 சேவைக்காலப் பணமாகக் கொடுக்கும்படி நீதிபதி திரு. எஸ். என். குருசாமி உத்தரவிட்டார். [க]

12-08-81 முதல்--------★

யாழ்ப்பாணம் — திருகோணமலை
திருகோணமலை — யாழ்ப்பாணம்
தினசரி காலை பஸ் சேவை

புறப்படும் நேரம்
யாழ்ப்பாணம் காலை 9-00 மணி
திருகோணமலை மாலை 3-30 மணி
உங்கள் பயணம் சொகுசாக அமைய
இதமான பஸ் சேவை

VANCON TRAVELS

ஆசனங்கள் பதிவு செய்யுமிடம்:

சியாமளா

140, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
(0577) போன்: 8078

## பீகாரில் விசேஷ பொலிஸ் படை

புதுடில்லி, ஆக. 9

பீகார் மாநிலத்தில் விசேஷ பொலிஸ் படையொன்று அமைக்கப்படுமென்று பீகார் முதலமைச்சர் டாக்டர் ஜெகந்நாத் மிஸ்ரா தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள மாநிலங்களில் இங்கேயே முதன் முதலாக விசேஷ பொலிஸ் படை அமைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். [வெ]

## அணு ஆயுத...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

றின் நிர்மாணக் கடமைகளில் உதவி புரிவதற்காகவும் இது முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அணு ஆயுத பேரழிவின் அபாயங்களை சாதாரண மனிதன் பயன் மனப்பான்மையுடன் உணரும்படி செய்வதற்காக சமாதான செய்தியை பிரசாரம் செய்யமுடியும்.

உலகின் புகழ்மிகு விஞ்ஞானிகளை உள்ளடக்கிய விஞ்ஞானக் கமிட்டியின் குரல் ஏற்கப்படும் அல்லது குறைந்த பட்சம் மதிப்புடன் கேட்கப்படும்.

G. C. E. A/L மாணவர்களுக்கு

குறியீட்டு அளவையியல்
SYMBOLIC LOGIC

G. C. E. A/L புதிய பாடத்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கியது

ஆசிரியர்
சி. லிங்கசாமி சர்மா, B. A. (Hons)
உதவி விரிவுரையாளர், மெய்யியல்துறை
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

எஸ். ஏ. பிரான்சிஸ் பி. ஏ.

யாழ். நகரின் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

மக்மிலன் புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### ஆசிரியை கனகம்மா சிங்கரட்னம்

காலஞ்சென்ற மூத்ததம்பி சிங்கரட்னம் அவர்களின் மனைவியும், இளைப்பாறிய ஆசிரியையுமான திருமதி கனகம்மா சிங்கரட்னம் அவர்கள் காலமானார். இவர் தபோநிதி கந்தையா [மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை,] நாகரட்னேஸ்வரி [ஆசிரியை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை] ஆகியோரின் தாயாரும், ம. கந்தையா [இளைப்பாறிய அதிபர்], காலஞ்சென்ற டாக்டர் நா. பரமானந்தம் ஆகியோரின் மாமியாரும், சட்டத்தரணிகள் ஜெய்கிருஷ்ணன். கலாநிதி, வாமதேவன் [மக்கள் வங்கி, திருகோணமலை] ஜெபரூபிணி, ஜெயந்தி, மிருணாளினி, ஜமுனாளினி, நந்தகுமார், கிரிதாகுமார், பரமகுமார், வேல்குமார் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-ம் திகதி திங்கட்கிழமை கெருடாவிலில் நடைபெறும். உற்றாரும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

0578

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி.
603ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper
at the General Post office: Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707. 389. 8126.